# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## மதிப்பீட்டுத் தாள் 2022–2023

## வளர்தமிழ் 7

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

TEDC - FRANCE

TEDC - FRANCE

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. கந்தரோடைக்கு நிகரான தலைநகராக விளங்கிய இடம்

அ ) பொலநறுவை ☐ ஆ ) அநுராதபுரம் ☐

இ ) பூநகரி ☐ ஈ ) குஞ்சுப்பரந்தன் ☐

2. கொடுத்த என்ற பெயரெச்சத்தை வினையெச்சமாக மாற்றினால்

அ ) கொடுத்தான் ☐ ஆ ) கொடுத்து ☐

இ ) கொடுத்தது ☐ ஈ ) கொடுக்கின்ற ☐

3. மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் உள்ள இசைத்தூண்கள்

அ ) 9 ☐ ஆ ) 12 ☐

இ ) 7 ☐ ஈ ) 5 ☐

4. கட்டப்பொம்மனின் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை முற்றுகையிட்டவர்

அ ) ஆங்கிலேயர் ☐ ஆ ) போர்த்துக்கேயர் ☐

இ ) ஒல்லாந்தர் ☐ ஈ ) இத்தாலியர் ☐

5. பைல் என்னும் கோட்டை அமைந்துள்ள இடம்

அ ) ஆனையிறவு ☐ ஆ ) மட்டக்களப்பு ☐

இ ) சிலாபம் ☐ ஈ ) வெற்றிலைக்கேணி ☐

6. விழுப்புண்பட்ட வீரனின் மார்பிலிருந்து குருதி குபுகுபு என வெளியேறியது.

இங்கு குபுகுபு என்பது

அ ) அடுக்குத்தொடர் ☐ ஆ ) இணைமொழி ☐

இ ) இரட்டைக்கிளவி ☐ ஈ ) அடுக்கிடுக்குத்தொடர் ☐

TEDC

7. ''வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்தில்....'' என்ற பாடல் இடம்பெற்ற நூல்

அ ) மூதுரை ☐ ஆ ) நல்வழி ☐

இ ) ஆத்திசூடி ☐ ஈ ) கொன்றைவேந்தன் ☐

8. தமிழ் + கவிஞர்

அ ) தமிழ்க்கவிஞர் ☐ ஆ ) தமிழ்கவிஞர் ☐

இ ) தமிழ்ங்கவிஞர் ☐ ஈ ) தமிழ்ப்கவிஞர் ☐

9. பங்கம் என்பதன் பொருள்

அ ) வயல் ☐ ஆ ) வரம்பு ☐

இ ) தாமரை ☐ ஈ ) சேறு ☐

10. மூவேந்தராலும் மதிக்கப்பட்ட புலவர்

அ ) வேந்தனார் ☐ ஆ ) பாரதியார் ☐

இ ) கண்ணதாசன் ☐ ஈ ) மோசிகீரனார் ☐

11. வேர், பூ, கால், வால் என்பன

அ ) சினைப்பெயர் ☐ ஆ ) குணப்பெயர் ☐

இ ) பொருட்பெயர் ☐ ஈ ) காலப்பெயர் ☐

12. திருகோணமலையை வன்னியின் தலைநகராகக் கொண்டு அறந்தவறாது ஆட்சி செய்த மன்னன்

அ ) எல்லாளன் ☐ ஆ ) இராவணன் ☐

இ ) பண்டாரவன்னியன் ☐ ஈ ) சங்கிலியன் ☐

TEDC

13. ஒருவருடைய அகமலர்ச்சியையும் முகமலர்ச்சியையும் கொல்வது

அ ) தீ ☐ ஆ ) சினம் ☐

இ ) முயற்சி ☐ ஈ ) மணம் ☐

TEDC

14. **பழமொழி:**

முதலையும் ____________ கொண்டது விடா.

அ ) பகைவனும் ☐ ஆ ) நண்பனும் ☐

இ ) முருடனும் ☐ ஈ ) இரண்டகனும் ☐

15. பார்த்தனர் என்பது

அ ) தன்மை ☐ ஆ ) படர்க்கை ☐

இ ) ஒருமை ☐ ஈ ) முன்னிலை ☐

16. பின்வருவனவற்றுள் வேறுபட்ட சொல்

அ ) விசிறி ☐ ஆ ) கவரி ☐

இ ) சாமரம் ☐ ஈ ) முரசு ☐

17. 'நாடுகாத்த சிறுவன்' எனப் பாராட்டப்பட்டவன்

அ ) பிரிங்கர் ☐ ஆ ) மருதுபாண்டியன் ☐

இ ) நெடுஞ்செழியன் ☐ ஈ ) வேழன் ☐

18. 17 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் அநுராதபுரம் தமிழருக்குச் சொந்தமாக இருந்தது என்பதை ____________ என்ற நூலிலிருந்து அறியலாம்.

அ ) வன்னிக்குறிப்பு ☐

ஆ ) இலங்கையின்வரலாற்று உறவுகள் ☐

இ ) தமிழ்ப்பண்பாடு ☐

ஈ ) தமிழ்மொழிவரலாறு ☐

TEDC

19. பூவழகி வெண்ணிற மலரைத் தலையில் சூடினாள். இதில் இடம்பெற்றுள்ள செயப்படுபொருள் அடைமொழி

அ ) பூவழகி ☐ ஆ ) சென்றாள் ☐

இ ) வெண்ணிற ☐ ஈ ) கலைவிழா ☐

20. நாகருக்கும் வன்னிமண்ணுக்கும் உள்ள தொடர்புகளுக்குச் சான்றாக விளங்கும் குளத்தின் பெயர்

அ ) பாவற்குளம் ☐ ஆ ) நாகபடுவான்குளம் ☐

இ ) சேந்தான்குளம் ☐ ஈ ) இரணைமடுக்குளம் ☐

21. எழுச்சி என்பதன் எதிர்ச்சொல்

அ ) மாட்சி ☐ ஆ ) புகழ்ச்சி ☐

இ ) வீழ்ச்சி ☐ ஈ ) சூழ்ச்சி ☐

22. "துஞ்சுமேதி சுறாக்களைச் சீற..."இதில் மேதி என்பது

அ ) ஆமை ☐ ஆ ) இறால் ☐

இ ) பெண் எருமை ☐ ஈ ) முதலை ☐

23. 'இலக்கிய இன்பம்' என்ற பாடலில் பலாக்கனிகளைக் கீறிப் பிளந்தவை

அ ) மீன்கள் ☐ ஆ ) நண்டுகள் ☐

இ ) சுறாக்கள் ☐ ஈ ) குரங்குகள் ☐

24. வண்டுகள் மலர்களிலிருந்து தேனைக் ______________ .

அ ) குடித்தனர் ☐ ஆ ) குடித்தது ☐

இ ) குடிக்கின்றது ☐ ஈ ) குடித்தன ☐

TEDC

25. பறை, உடுக்கு, தண்ணுமை என்பன

அ ) தோற்கருவிகள் ☐ ஆ ) துளைக்கருவிகள் ☐

இ ) கஞ்சக்கருவிகள் ☐ ஈ ) நரம்புக்கருவிகள் ☐

26. வயலும் வயல் சார்ந்த இடமும்

அ ) குறிஞ்சி ☐ ஆ ) மருதம் ☐

இ ) முல்லை ☐ ஈ ) நெய்தல் ☐

27. எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததும் மக்கள் கூச்சலிட்டனர். இதில் இடம்பெற்றுள்ள எழுவாய்

அ ) எறிகணைகள் ☐ ஆ ) கூச்சலிட்டனர் ☐

இ ) மக்கள் ☐ ஈ ) வீழ்ந்து ☐

28. எழுதினான் என்பதன் வினையடி

அ ) எழுது ☐ ஆ ) எழு ☐

இ ) எழுதிய ☐ ஈ ) எழுதி ☐

29. காராளன் போரினால் அல்லலுறும் மக்களுக்கு உதவுவதற்காக ____________ ச் சென்று நிதி திரட்டினான்.

அ ) அணிஅணியாக ☐ ஆ ) வீடுவீடாக ☐

இ ) ஏற்றஇறக்கமாக ☐ ஈ ) மணிமணியாக ☐

30. ____________ 'அடங்காப்பற்று' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றது.

அ ) யாழ்ப்பாணம் ☐ ஆ ) கண்டி ☐

இ ) கொழும்பு ☐ ஈ ) வன்னி ☐

புள்ளிகள் 30



TEDC

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

இயற்கைக்காட்சியில் அழகொழிக்கும் மாலைக்காட்சி மனதிற்கு இன்பம் தரும். கதிரவன் பரந்து விரிந்த தனது ஒளிக்கதிர்களைச் சுருக்கிக்கொண்டு மறையத் தொடங்கும். அடிவானம் செக்கச்சிவந்து அழகாகக் காட்சியளிக்கும். இருள் எங்கும் மெல்லமெல்லப் பரவத்தொடங்கும். தாமரை மலர்கள் கூம்ப அல்லி மலர்கள் இதழ் விரிக்கும். முல்லை மலர்கள் போல விண்மீன்கள் வானத்தில் கண்சிமிட்டிச் சிரிக்கும். பறவைகள் தத்தம் கூடுகளை நோக்கித் திரும்பும். ஆநிரையும் ஆடுகளும் தொழுவங்களை நோக்கி விரையும். விளையாடிக்களித்த சிறுவர்கள் வீடு நோக்கிச் செல்வர். மாலை மலரும் மல்லிகையும் முல்லையும் எங்கும் இனிய மணத்தைப் பரப்பத் தொடங்கும். பகல் முழுவதும் உழைத்துக் களைத்த மாந்தர் ஓய்வெடுக்கும் இரவை நோக்கி மாலைப்பொழுது மெல்லமெல்ல நகர்ந்து செல்லும்.

1. மனதிற்கு இன்பம் தரும் காட்சி எது?

___________________________________________

2. மாலையில் அடிவானம் எவ்வாறு காட்சியளிக்கும்?

___________________________________________

3. தொழுவங்களை நோக்கி விரைபவை எவை?

___________________________________________

___________________________________________

4. இனிய மணத்தைப் பரப்பும் பூக்கள் எவை?

___________________________________________

5. முல்லை மலர்கள் போல் வானத்தில் கண்சிமிட்டிச் சிரிப்பவை எவை?

___________________________________________

___________________________________________

புள்ளிகள் 10

TEDC

## 3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

TEDC

1. வன்னியில் தமிழ்ப்பிராமி எழுத்துகளைக் கொண்ட கல்வெட்டுகள் எங்கே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன?

___________________________________________

2. தமிழர் கலைகளை எத்தனையாக வகுத்தனர்? அவற்றுள் நுண்கலைகள் இரண்டைத் தருக.

___________________________________________

3. யாருக்கு அஞ்சிப் போர்த்துக்கேயர் கோட்டைகளைக் கட்டினர்?

___________________________________________

4. "யாகாவா ராயினும் ...." என்ற குறளில் வள்ளுவர் எதைக் காக்க வேண்டும் என்று கூறுகின்றார்?

___________________________________________

___________________________________________

5. "கொற்றவனே தன் கையால் எனக்குக் குளிர் சாமரம் வீசுகிற காட்சி என்னே!...." என்று யாரால், யாருக்குக் கூறப்பட்டது?

___________________________________________

___________________________________________

6. யாழ்ப்பாண அரசு எந்நூற்றாண்டிலிருந்து வலிமை பெற்றிருந்தது?

___________________________________________

7. கஞ்சமகள் எனக் குறிப்பிடப்படும் மலர் எது?

___________________________________________

TEDC

புள்ளிகள் 10

**4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி, கவிதையை முழுமையாக்குக.**

TEDC

# ஆறு

| தோட்டம் | நலத்தை | ஆறு | கடலில் | மண்ணில் |
|---|---|---|---|---|

மலையில் பிறந்த ஆறு
________________ தவழ்ந்தே நீளும்
நிலையா யின்றி ஓடி
நீலக் ________________ சேரும்!

காடு, மேடு சுற்றிக்
கழனி, ________________ கண்டு
வாடும் பயிரை மாற்றி
வளத்தை வழங்கும் ________________

பிறந்த இடத்தை விட்டுப்
பிறரின் ________________ப் பேணும்
பெருமை மிக்க ஆற்றைப்
பெரிதும் வணங்குவோமே!

TEDC

புள்ளிகள் 05

## 5) அ) பந்தியை வாசித்து இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.

அது ஓர் அழகிய சிற்றூர். அச்சிற்றூரைத் தென்னந்தோப்புகளும் மாஞ்சோலைகளும் அழகுபடுத்துகின்றன. சிற்றூரின் நடுவே அழகுக்கு அழகு சேர்த்தாற்போல சிறிய ஆறு ஒன்று ஓடுகின்றது. அந்த ஆற்றங்கரையில் உறங்கிய வெள்ளை முயல்கள் நீர் குடிக்க வந்த மான்களின் ஒலி கேட்டுப் புதர்களுக்குள் ஓடி மறைந்தன. அக்காட்சியைக் கண்டு மகிழ்ந்தவாறு வளவன் காவிருக்கையில் இருந்தான். அப்பொழுது வளவனுக்கு அருகில் வந்த ஆதவி வளவனின் மேல் மண்ணை எறிந்தாள். வளவனின் உடலில் மண்படவே வளவன் சினங்கொண்டு ஆதவியை அடிப்பதற்காகத் துரத்திச் சென்றான்.

1. பெயரெச்சம் ஒன்று தருக.

_______________________________________________

2. ஆண்பாலுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

_______________________________________________

3. அடைமொழி ஒன்று தருக.

_______________________________________________

4. இரண்டாம் வேற்றுமை உருபு ஏற்ற சொல் எது?

_______________________________________________

5. நிகழ்காலச் சொல்லியம் ஒன்று எழுதுக.

_______________________________________________

புள்ளிகள் 10

### ஆ) 1. பொருத்தமாக நிரற்கூட்டில் எழுதுக.

| | திணை | பால் | இடம் |
|---|---|---|---|
| கொடுத்தீர்கள் | | | |
| தாவுகின்றது | | | |

புள்ளிகள் 03

TEDC

2. **தரப்பட்டுள்ள சொல்லியத்தை வினாச்சொல்லியமாக மாற்றி எழுதுக.**

1. போர்த்துக்கேயர் சங்கிலியனைச் சிறைப்பிடித்து கோவாவிற்குக் கொண்டு சென்றனர்.

______________________________

2. தாயகத்தில் துயிலும் இல்லங்கள் அமைந்துள்ளன.

______________________________

புள்ளிகள் 02

TEDC

## 6) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

| களை | கலை | உரை | உறை | ஒளி | ஒலி |
|---|---|---|---|---|---|

தமிழினியின் தமிழ்ப்பள்ளியில் ____________ விழா நடைபெற்றது. அவளும் அவளது நண்பிகளும் நாட்டார்பாடல் ஒன்றுக்கு நடனம் ஆடினர். அந்நடனத்தில் ____________ பிடுங்கும் காட்சி சிறப்பாக இருந்தது. அந்நிகழ்வில் முதன்மை விருந்தினரின் ____________ இடம்பெற்றது. எமது பண்பாட்டைப் பேண வேண்டியதன் அகத்தியம் பற்றி அவர் வலியுறுத்தியிருந்தார். அதனைத் தொடர்ந்து நாடகத்தில் பங்குபெறும் மாணவர்களை அணியம் செய்யுமாறு ____________ பெருக்கியில் அறிவித்தனர். நிகழ்வுகளுக்கு ஏற்றவாறு அரங்கின் ____________ கூட்டிக் குறைக்கப்பட்டது. அவையோர் நிகழ்வுகளைப் பார்த்து மகிழ்ந்தனர்.

TEDC

புள்ளிகள் 05

## 7) பந்தியை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.

காவியன் நூலகம் செல்வதற்காகப் பேருந்தில் ஏறினான். அங்கே ஓர் இருக்கையில் இருந்தான். பேருந்து சென்று கொண்டிருந்தது. இருக்கைகள் யாவும் நிறைந்திருந்ததால் பலர் இருக்கைகள் இன்றி நின்றனர். அப்பொழுது ஒரு முதியவர் ஊன்றுகோலுடன் பேருந்தில் ஏறினார். அவரைக் கண்டதும் காவியன் இருக்கையை விட்டு எழுந்து முதியவரை இருக்குமாறு கூறினான். உடனே அவர் மகிழ்ச்சியுடன் நன்றி கூறி இருக்கையில் அமர்ந்தார்.

புள்ளிகள் 05

TEDC

**8) தரப்பட்டுள்ள பழமொழிகளுக்குப் பொருத்தமான கருத்தைத் தெரிவு செய்து எழுதுக.**

✸ சார்ந்ததன் தன்மையைப் பெறல்.

✸ முயற்சி உயர்வைத் தரும்.

✸ மனநிறைவற்ற நிலை.

✸ வாழ்வின் பயனைப் பெறுவதற்குத் தனித்து நிற்காதே!

✸ வறுமையிலும் செம்மையாக இரு.

1. இரக்கப்போனாலும் சிறக்கப்போ.

______________________________

2. அக்கரைமாட்டுக்கு இக்கரை பச்சை.

______________________________

3. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்.

______________________________

4. பூவுடன் சேர்ந்த நாரும் மணக்கும்.

______________________________

5. தனிமரம் தோப்பாகாது.

______________________________

TEDC

| புள்ளிகள் 05 |
|---|

**9) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து, 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- தலையைக் காத்த தமிழ்
- தமிழிசை
- மழை நாள்
- தொலைக்காட்சி
  - கண்டுபிடித்தவர்
  - தொலைக்காட்சியில் இடம் பெறும் நிகழ்வுகள்
  - தொலைக்காட்சி பார்ப்பதனால் ஏற்படும் நன்மைகளும் தீமைகளும்

TEDC

TEDC

புள்ளிகள் 15